இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 04
LWU 2313 – குடும்பச் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 03.04.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1 ஐக்கிய நாடுகள் முகவர் அமைப்பொன்றுக்கு ஒப்படைப்பதற்காக கடந்த 10 வருட காலப்பகுதிகளில் இலங்கையில் சிறுவர்களுடைய நிலைமையை தரம் உயர்த்துவதற்கு மேற் கொள்ளப்பட்ட வழிவகைகளையும் மேலும் அபிவிருத்தி செய்வதற்குரிய அவசியமான துறைகளையும் பற்றி அறிக்கை ஒன்றை தயாரிக்க, இலங்கை அரசு திட்டமிடுகிறது.

உமது அறிக்கையின் நகல் பிரதி ஒன்றை தயார் செய்க.

2. ஹேரத், கல்பனா ஆகிய இருவரும் பட்டதாரிகள் ஆவர். அவர்கள் அரச துறையிலே தொழில்புரிந்தனர். கண்டியர்களான இவ்விருவரும் தமது திருமணத்தை கண்டியச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தனர். அவர்களுக்கு 1996 ஆண்டு சுஜித் என்ற மகன் பிறந்தான். ஹேரத், தன்னுடைய தந்தையாரிடம் இருந்து 5 ஏக்கர் நிலத்தை வழியுரிமையாக பெற்றான். மேலும் ஹேரத் தன்னுடைய வியாபாரத்தில் இருந்து பெறப்பட்ட பணத்தை கொண்டு தெல்தெனியவில் வீடு ஒன்றை கட்டினான். அதே வேளை ஹேரத், வினிதா என்ற பெண்ணுடன் உறவு ஒன்றை ஏற்படுத்தி கொண்டான். ஆவள், கமல் என்ற பிள்ளையொன்றை பெற்றெடுத்தாள். வினிதா, ஹேரத்திற்கு எதிராக, பராமரிப்பு வழக்கொன்றை நீதிமன்றத்தில் கோப்பிட்டதன் விளைவாக நீதிமன்ற கட்டளையொன்றின் மீது அவன் கமலுக்கு பராமரிப்பு செலுத்தி வருகிறான்.

ஹேரத் விபத்தொன்றின் விளைவாக 2005ம் ஆண்டு இறந்தான். ஹேரத்துடைய மரணசாதனமற்ற சொத்துகளுக்கு உரித்துடையோர் யார் என அறிந்து கொள்ள கல்பனா உம்மை கலந்தாலோசிக்கிறாள்.

(அ) கல்பனாவுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) கட்சிகாரர் அனைவரும் பொதுச் சட்டத்தின் கீழ் ஆளப்படுவார்களாயின் உமது விடை வேறுபடுமா?

3. "தேசவழமையின் கீழான தேடியதேட்டம் என்ற எண்ணக்கருவின் தோற்றுவாய் 1911ம் ஆண்டின் யாழ்ப்பாண மணஞ்சார் உரிமைகள் மற்றும் மரபுரிமை கட்டளைச் சட்டத்தினால் குறிப்பிடத்தக்களவில் மாற்றமடைந்தது".

1911 - 1947 ஆண்டு காலப்பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட வாக்க திருத்தங்கள், தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றை கொண்டு இக் கூற்றினை ஆராய்க.

4. மகேந்திரன், தேவி ஆகிய இருவரும் தேச வழமை சட்டத்தின் கீழ் ஆளப்படுகின்றனர். மகேந்திரனுடைய பெற்றோரின் திருமணப் பேச்சுவார்த்தையின் விளைவாக 20 வயதான மகேந்திரனும் 16 வயதான தேவி இருவருக்கும் இடையில் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டு திறத்தவர்களினால் அளிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இருவருடைய திருமணமும் 1998ம் ஆண்டு திருமண பதிவாளரின் முன் பதிவு செய்யப்பட்டது.

திருமணத்தின் பின்பு மகேந்திரன் வாடகைக்கு வாங்கிய வீட்டில் இருவரும் கணவன், மனைவியாக வாழுந்தனர். 2001ம் ஆண்டு அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுடைய பெயர் ராஜு ஆகும். மகேந்திரன், தனது மனைவியையும், ராஜுவையும் 2003ம் ஆண்டு கைவிட்டதுடன் அவர்களுடைய வாழ்க்கைச் செலவுக்குரிய பணத்தை அனுப்ப மறுத்தான். மகேந்திரனிடம் இருந்து தங்களுடைய பராமரிப்புக்குரிய நிதி உதவி எதனையும் பெற்றுக்கொள்ள முடியுமா என தேவி உம்மிடம் அறிய விரும்புகிறாள்.

(அ) தேவிக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) திறந்தவர்கள்

(1) கண்டியர்

(2) முஸ்லிமகள் ஆக இருப்பின் உமது சட்ட நிலைமை யாது?

LIBRARY

5. முஸ்லிம்களான ரமணா, ஹுசைன் இருவரும் முஸ்லிம் சட்டத்தின் கீழ் திருமணம் செய்தனர். அவர்களுக்கு 16 வயதுடைய மகளும் 6 வயதுடைய மகனும் இருந்தனர். ஹுசைன் ஒரு வியாபாரியாவன். கிழமையில் ஏழு நாட்களும் காலை 6.00 மணிக்கு வீட்டை விட்டு வெளியே சென்று இரவு 11.00 மணிக்கு வீடு திரும்புவான். எந்த காரணத்திற்காகவும் ரமணாவை வெளியே அனுப்ப விரும்பாத ஹுசைன் அவளுக்குரிய அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்தான். ரமணா தனது வீட்டருகில் தனது மகன் கல்விகற்கும் பாடசாலையில் இருந்து அவனை விலக்கி கொழும்பில் உள்ள பிரபல முஸ்லிம் பாடசாலை ஒன்றில் சேர்க்க விரும்பினான். எனினும் இவ்விடயம் தொடர்பாக அரசாங்க அதிகாரிகள் பின்னால் செல்ல தனக்கு கால நேரம் இல்லை என ஹுசைன் கூறினான். குடும்பத்தில் அக்கறை குறைந்த விட்டது என முறைபாடு கூறி, ரமணா அடிக்கடி ஹுசைன் உடன் சண்டை போட்டாள். இவ்வாறு ஒரு நாள் சண்டை ஏற்பட்ட போது பிள்ளைகளை தன்னிடம் விட்டுவிட்டு ரமணாவை வீட்டை விட்டு செல்லுமாறு ஹுசைன் கட்டளையிட்டான். அவள் வீட்டை விட்டு சென்று தன்னுடைய பெற்றோருடன் வசித்து வந்தாள். ஹுசைன் 18 வயதுடைய முஸ்லிம் இளைஞனை வேலைக்கு அமர்த்தினான். அவன் உணவு தயாரிப்பதோடு, வீட்டையும் கவனித்து வந்தான். ரமணா வீட்டுக்கு வந்தால் படலையை திறக்க வேண்டாம் எனவும் வேலைக்காரனிடம் கட்டளையிட்டான்.

பிள்ளைகள் மீது அதிக பாசம் உடைய ரமணா பிள்ளைகளுடைய பாதுகாவலை பெற விரும்புகிறாள்.

(அ) அவளுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) திறந்தவர்கள் இருவரும் சிங்களவர்களாக இருந்து இருவரும் பொதுச் சட்டத்தின் கீழ் ஆளப்படுவார்களாயின் உமது விடை வேறுபடுமா?

6. கல்யாண தரகர் ஒருவரினால் கொண்டு வரப்பட்ட திருமண பேச்சுவார்த்தையின் மீது சமன், ருவன்மலி இருவரும் தமது திருமணத்தை பொதுச் சட்டத்தின் கீழ் 2000ம் ஆண்டு பதிவு செய்தனர். ருவன்மலி ஒரு குறுந்தூர ஓட்ட வீராங்கனை ஆவாள்.

அவள் பல சர்வதேச விளையாட்டு போட்டிகளில் இலங்கை பிரிதிநிதயாக பங்குபற்றினாள். திருமண நாளன்று ருவண்மலி கன்னித்தன்மையற்றவள் என்பதை சமண் கண்டான். இதன் பின்பு, இக்காரணத்தை கொண்டு சமன் ருவன்மலியுடன் அடிக்கடி சண்டை போட்டான். இதே காரணத்தின் நிமித்தம் வீட்டுக்கு வருகை தந்த தனது நண்பர்கள் முன்னிலையில் ருவண்மலியை இகழ்ந்தான். அவனுடன் வசித்து வந்த அவனது தாயாரும் அவளை தரக்குறைவாக நடாத்தினாள். தனது தாயாருடைய செயல்களை அவன் நியாயப்படுத்தினான். இதற்கு காரணம் ருவண்மலியுடைய கெட்ட நடத்தையே எனவும் குறிப்பிட்டான். 2003ம ஆண்டு சமன் தனது இரண்டு மாடி கட்டிட வீட்டிலே தனி அறையில் வசிக்க தொடங்கினான். மேலும் ருவண்மலியை தனது அறைக்குள் வருவதை தடுத்தான். ருவண்மலிக்கு உணவு தயாரிக்க வேண்டாம் என தாயிடம் கூறினான். அவள் தனக்குரிய உணவை தானே தயாரிக்க வேண்டும் என கூறினான். தனக்கு எவ்வகையான மணஞ்சார் பரிகாரம் காணப்படுகிறது என்பதை அறிய ருவணமலி உம்மை ஆலோசிக்கிறாள்.

ருமண்மலிக்கு ஆலோசனை வழங்குக.

7. இல. 14, 1895ம் ஆண்டின் சான்று கட்டளைச் சட்டத்தின் பிரிவு 112ன் கீழ் காணப்படும் "அணுகாமை" என்ற சொற்றொடரின் நீதி முறை பொருள்கோடல்களின் இற்றைவரையான முக்கியமான அபிவிருத்திகளை கண்டறிக.

8. பின்வருவனவற்றில் இரண்டினை பற்றி குறிப்பெழுதுக.

   (அ) கூடி வாழ்தலும் மதிப்பும்(Habit and repute) மூலமான திருமண கோட்பாட்டின் நீதிமுறை பொருள்கோடலின் அபிவிருத்தி.

   (ஆ) பிள்ளையுடைய அதி கூடிய அக்கறை அல்லது நலன் பற்றிய எண்ணக்கரு

   (இ) பொதுச்சட்டத்தின் கீழ் திருமணத்தை வெற்றாக்கும் காரணிகள்

   (ஈ) உரோமன் டச்சு சட்டத்தின் கீழ் கைவிடப்பட்ட மனைவி ஒருவரின் உரிமைகள்.

(பதிப்புரிமையுடையது)